05 5263

**கற்றல் ஊக்கி - 7.5.1**

பாடம் :- **வரலாறு**

தரம் :- 07

அறிவுறுத்தல்கள்

- வினாக்களைப் பகுதியாகவோ முழுமையாகவோ கற்பித்தலின்போதோ அல்லது அலகு முடிவிலோ வசதிக்கேற்ப பயன்படுத்தலாம்.
- தேர்ச்சி அடிப்படையிலான விளக்கமளிப்பதற்கும் கணிப்பீட்டிற்கும் இது பயன்படுத்தப்படலாம்.

| பெயர் | |
|---|---|

**Aaruthal** Sri Lanka

**2017 - தவணை - 03**

பரீட்சையாளரின் பாவனைக்கு

| பகுதி | A | | | | B | | | | மொத்தப் புள்ளி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வினா எண் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | |
| ஒதுக்கப்பட்ட புள்ளி | 10 | 10 | 10 | 10 | 16 | 24 | 15 | 5 | 100 |
| பெற்ற புள்ளி | | | | | | | | | |

## ஐரோப்பாவின் புராதன நாகரிகங்கள்

### கிரேக்க நாகரிகம்

பகுதி - A

01) **பொருத்தமான விடையின் கீழ் கோடு வரைக.**

(1) கிரேக்க நாடு ஒரு **(தீவு / குடாநாடு)**

(2) கிரேக்கத்திற்கு உரிய மிகப்பெரிய தீவு **(கிரிட் / சிசிலி)**

(3) கிரேக்கத்தில் காணப்படும் மலை **(இமயமலை / ஒலிம்பஸ் மலை)**

(4) கி. மு. 700 ஆம் ஆண்டில் கிரேக்கத்தில் உருவானது **(கிராம அரசு / நகர அரசு)**

(5) நேரடி ஜனநாயக ஆட்சியின் தாயகம் **(உரோம் / கிரேக்கம்)**

(5 × 2 = 10 புள்ளிகள்)

02) **மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து கீறிட்ட இடத்தில் எழுதுக.**

(1) கிரேக்கர் இலங்கைக்கு ...................................................... என பெயரிட்டனர்.
**(செரண்டிப் / தப்ரபேன் / சிலோன்)**

(2) இலியட், ஒடிசி என்னும் வீரகாவிய நூலை ...................................................... எழுதினார்.
**(ஹெரடோடஸ் / அரிஸ்ரோட்டில் / ஹோமர்)**

(3) கிரேக்கத்தில் மாடி வீட்டில் வசித்தவர்கள் ...................................................... ஆவார்.
**(பிரபுக்கள் / அடிமைகள் / சாதாரண குடி மக்கள்)**

(4) கணித விஞ்ஞானத்தின் தந்தை ...................................................... ஆவார்.
**(பிளேட்டோ / ஹிப்போகிரடிஸ் / ஆக்கிமிடிஸ்)**

(5) பெரிக்ளீஸ் ஆட்சியாளன் .............................. என்னும் தலைநகரத்தை உருவாக்கினான்.
**(அக்ரோபொலிஸ் / ஸ்பாட்டா / கொரிந்து)**

(5 × 2 = 10 புள்ளிகள்)

03) **"A" நிரலுடன் பொருத்தமானவற்றை "B" நிரலுடன் தொடர்புபடுத்தி சரியான விடையைத் தெரிவு செய்க.**

(1)

| *A* நிரல் | *B* நிரல் |
|---|---|
| 1. விவசாயம் | *A* - லினன் துணி |
| 2. மந்தை வளர்ப்பு | *B* - கோதுமை |
| 3. வர்த்தகம் | *C* - ஆடு |

(1) *ABC* (2) *BCA* (3) *BAC* (4) *ACB*


Copyright © Aaruthal 2017

(2) **A நிரல்** **B நிரல்**

1. வீரகாவியம் — A - யூரிபீடிஸ்
2. நாடகம் — B - ஹோமர்
3. தத்துவம் — C - பிளேற்றோ

(1) BAC (2) BCA (3) ABC (4) ACB

(3) **A நிரல்** **B நிரல்**

1. நகரம் — A - அயோனியன்
2. கடல் — B - கிரீட்
3. தீவு — C - ஸ்பாட்டா

(1) ABC (2) BCA (3) CAB (4) ACB

(4) **A நிரல்** **B நிரல்**

1. கட்டடக்கலை — A - அதீனா தேவதை
2. சிற்பங்கள் — B - பாதீனன் ஆலயம்
3. இலக்கியம் — C - இலியட்

(1) ACB (2) CAB (3) BCA (4) BAC

(5) **A நிரல்** **B நிரல்**

1. கிழக்கு — A - மத்தியதரை
2. மேற்கு — B - அயோனியன்
3. தெற்கு — C - ஈஜியன்

(1) ACB (2) CAB (3) BAC (4) CBA

($5 \times 2 = 10$ புள்ளிகள்)

04) **பொருத்தமான விடையின் கீழ்க் கோடு வரைக.**

(1) மத்தியதரைக் கடலுக்குள் நீட்டிக் கொண்டிருக்கும் குடாநாடு
(1) ஸ்பெயின் (2) கிரேக்கம் (3) பாரசீகம் (4) துருக்கி

(2) இந்தோ ஐரோப்பிய இனக்குழு ஆக்கிரமிப்பால் அழிவடைந்த நாகரிகம்
(1) கிரேக்கம் (2) உரோமம் (3) மினோவன் (4) இந்தியா

(3) கிரேக்கர் வர்த்தக தொடர்பு கொண்ட கீழத்தேச நாடு
(1) சீனா (2) யப்பான் (3) அரேபியா (4) இந்தோனேசியா

(4) கிரேக்கத்தில் பிரசித்தி பெற்ற பழ வகைகள்
(1) அப்பிள், திராட்சை (2) திராட்சை, ஒலிவ்
(3) ஒலிவ், தோடை (4) தோடை, அப்பிள்

(5) மேற்குலக வைத்திய முறையின் தந்தையாக மதிக்கப்படுபவர்
(1) வில்லியம் ஹார்வே (2) ஆக்கிமீடிஸ்
(3) ஹிப்போகிரடிஸ் (4) பெரசல்ஸ்

($5 \times 2 = 10$ புள்ளிகள்)

06

## பகுதி - B

**05) அருகில் உள்ள படங்களை அவதானித்து விடை எழுதுக.**

(1) (i) இப்படத்தின் பெயர் என்ன?

.......................................................................................

(ii) இத் தெய்வத்திற்காக கட்டப்பட்ட ஆலயத்தின் பெயர்

.......................................................................................

(iii) இவருடைய தாயின் பெயர் என்ன?

.......................................................................................

(iv) இப்படத்துடன் தொடர்புடைய கலைநுட்பம் யாது?

.......................................................................................



($4 \times 2 = 8$ புள்ளிகள்)

(2) (i) இப்படத்தின் பெயர் என்ன?

.......................................................................................

(ii) இவ்வுருவுடன் தொடர்புடைய நாகரிகம் எது?


.......................................................................................

(iii) இப்படத்துடன் தொடர்புடைய கலைநுட்பம் என்ன?

.......................................................................................

(iv) இப்படத்துடன் தொடர்புடைய விளையாட்டு எது?

.......................................................................................



($4 \times 2 = 8$ புள்ளிகள்)

**06) பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.**

(1) (i) கிரேக்கத்தில் காணப்பட்ட நகர அரசுகள் இரண்டு தருக. (2 புள்ளி)

.......................................................................................

.......................................................................................

(ii) கிரேக்க நகர அரசுகளின் பண்புகள் மூன்று தருக. (3 புள்ளி)

.......................................................................................

.......................................................................................

.......................................................................................

(iii) கிரேக்கத்தினை ஆட்சி செய்த மன்னர்கள் மூவரின் பெயர்களைத் தருக. (3 புள்ளி)

.......................................................................................

.......................................................................................

.......................................................................................

 Copyright © Aaruthal 2017 

(2) (i) கிரேக்கத்தில் பயிரிடப்பட்ட தானியங்கள் இரண்டு எழுதுக. (2 புள்ளி)

..........................................................................................

..........................................................................................

(ii) கிரேக்கத்தில் வளர்க்கப்பட்ட மிருகங்கள் மூன்று எழுதுக. (3 புள்ளி)

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

(iii) கிரேக்கத்தின் பொருளாதார நடவடிக்கைகள் மூன்று எழுதுக. (3 புள்ளி)

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

(3) (i) கிரேக்கர் வியாபாரத் தொடர்பு கொண்ட கீழைத்தேச நாடு இரண்டு எழுதுக. (2 புள்ளி)

..........................................................................................

..........................................................................................

(ii) கிரேக்க குடாநாட்டைச் சுற்றியுள்ள மூன்று கடல்கள் எழுதுக. (3 புள்ளி)

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

(iii) கிரேக்க சமூக அமைப்பின் மூன்று பிரிவினர்களையும் எழுதுக. (3 புள்ளி)

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

07) (i) கிரேக்கத்தின் பிரசித்தி பெற்ற வீரகாவியங்கள் இரண்டு எழுதுக. (2 புள்ளி)

..........................................................................................

..........................................................................................

(ii) கிரேக்கரால் உலகிற்கு கிடைத்த கொடைகள் மூன்று எழுதுக. (3 புள்ளி)

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

(iii) கிரேக்கரால் அறிமுகப்படுத்தப்பட்ட கலைகள் மூன்று எழுதி அதற்கு ஒரு உதாரணம் தருக. (6 புள்ளி)

................................................................................ உதாரணம் ........................................

................................................................................ உதாரணம் ........................................

................................................................................ உதாரணம் ........................................

(iv) கிரேக்கத்தில் காணப்பட்ட கல்வி நிலையங்களையும் அதை உருவாக்கியவர்களையும் எழுதுக. (4 புள்ளி)


..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

08) கீழே தரப்பட்ட கிரேக்க நாகரிக படத்தில் காணப்படுவைகளின் பெயர்களை எழுதுக.




A - கடல் ........................................................

B - கடல் ........................................................

C - கடல் ........................................................

D - தீவு ........................................................

E - நகர அரசு ........................................................

(5 புள்ளி)

## தகவல் பத்திரம்

### கிரேக்க நாகரிகம்

| | |
|---|---|
| அமைவிடம் | ✱ மத்தியதரைக் கடலுக்குள் நீட்டிக் கொண்டிருக்கும் குடாநாடு |
| | ✱ வடக்கு - மசிடோனியா<br>தெற்கு - கிரீட் தீவு<br>மேற்கு - அயோனியன் கடல்<br>கிழக்கு - ஈஜியன் கடல் |
| | ✱ இந் நாகரிகத்திற்குரிய மிகப் பெரிய தீவு - கிரீட் தீவு |
| | ✱ புகழ்பெற்ற மலை - ஒலிம்பஸ் |
| நாகரிகத்தின் ஆரம்பம் | ✱ கிரீட் தீவை அடிப்படையாகக் கொண்ட நாகரிகம் மினோவன் நாகரிகம் |
| | ✱ இந்தோ ஐரோப்பிய இனக்குழுவால் வீழ்ச்சியடைந்தது. |
| | ✱ கி. மு. 2000 ஆண்டளவில் கிரேக்க நாகரிகம் உருவாகியது. |
| நிர்வாகம் | ✱ கோத்திரங்கள், மக்கள் கூட்டத்தினர்களால் கிராமங்கள் உருவாகியது. |
| | ✱ கிராமங்கள் அபிவிருத்தியடைந்து நகரங்கள் உருவாகியது. |
| | ✱ கி. மு. 700 ஆம் ஆண்டில் நகரங்களை அண்டி நகர அரசு உருவாகியது.<br>உ+ம்: ஏதென்ஸ், ஸ்பாட்டா |
| | ✱ நேரடி ஜனநாயகமுறை காணப்பட்டது. அதாவது மக்கள் ஒரே இடத்தில் ஒன்றுகூடி கலந்துரையாடி தீர்மானம் எடுத்தனர். |
| | ✱ நகர அரசுகளில் சில பண்புகள் காணப்பட்டது.<br>நிலப்பரப்பு சிறியது, சனத்தொகை வரையறைக்குட்பட்டிருந்தமை, பிரஜைகளுக்கு மாத்திரம் அரசியல் உரிமை |
| | ✱ பெரிக்ளீஸ் ஆட்சிக்காலம் பொற்கலம். இக்காலத்தில் அக்ரோபொலிஸ் என்னும் தலைநகரத்தை உருவாக்கினான். |
| | ✱ கிரேக்கத்தை மெஸிடோனியாவின் பிலிப் மன்னன் ஆக்கிரமித்தான். |
| | ✱ மன்னனின் திடீர் மரணத்தின் பின் மகன் மகா அலெக்ஸான்டர் கிரேக்கத்தை ஆட்சி செய்தான். |
| பொருளாதாரம் | ✱ விவசாயம் மந்தை வளர்ப்பு, வர்த்தகம் என்ற அடிப்படையில் வாழ்க்கை முறை காணப்பட்டது. |
| | ✱ விவசாயம் - கோதுமை பார்லி தானியமும் திராட்சை, ஒலிவ் பழங்கள் செய்கை பண்ணப்பட்டது.<br>மந்தை வளர்ப்பு - ஆடு, செம்மறியாடு, மாடு<br>வர்த்தகம் - நறுமணப் பொருட்கள், அலங்கார மட்பாண்டம், லினன் துணிவகை, வைன் பானம்,<br>இலங்கை, சீனா இந்தியாவுடன் வர்த்தக உறவு,<br>இலங்கையை தப்ரபேன் என குறிப்பிட்டனர். |

| | |
|---|---|
| வாழ்க்கை முறை | ✳ குடும்பம் சமூகத்தின் சிறிய அலகு |
| | ✳ சமூகம் - பிரபுக்கள், சாதாரண குடிகள், அடிமைகள் என காணப்பட்டது. |
| | ✳ வசிப்பிடம்<br>- பிரபுக்கள் மாடிவீடு அதில் நடு முற்றம் சூழ படுக்கை அறைகள் சமையலறை, களஞ்சிய அறை காணப்பட்டது.<br>- சாதாரண மக்கள் சிறிய வீடுகள் |
| | ✳ உணவு - மரக்கறி, இறைச்சி, பார்லி, மீன் வைன் என்ற உணவும் பானமும் இருந்தன. |
| கலைகள் | ✳ கட்டடக்கலை<br>- பெரிய கட்டடங்களையும் தேவாலயங்களையும் அமைத்தனர்.<br>- தேவாலயங்களை கட்டுவதற்கு செப்பனிடப்பட்ட சுண்ணாம்புக்கல், வெண்பளிங்குக்கல் வர்ண செங்கற்கள் பயன்படுத்தினர்.<br>உதாரணம் : பாதீனன் ஆலயம் |
| | ✳ சிற்பங்கள் சிலைகள்<br>- மனித சரீர அமைப்புகளின் இயற்கைத் தன்மை வெளிப்படுத்தும் சிலைகளை வடிவமைத்தனர்.<br>உதாரணம் : பரிதிவட்டம் வீசும் விளையாட்டு வீரன்சிலை<br>- சிலைகளை நிர்மாணிக்கும் போது யானை தந்தம், தங்கம் பயன்படுத்தினர்.<br>உதாரணம் : அதீனா தேவதையின் சிலை |
| | ✳ நாடகம்<br>- இன்பியல் துன்பியல் என்னும் கருவை மையமாகக் கொண்ட நாடகங்கள்<br>- பிரசித்தி பெற்ற நாடக கலைஞர்கள் காணப்பட்டனர்.<br>உதாரணம் : ஈசிகளால், செபொக்லீஸ், யூரிபிடிஸ் |
| | ✳ இலக்கியம்<br>- கிரேக்க மொழியில் நூல்களை எழுதினார்.<br>- உயர் இலக்கியப் படைப்புக்கள்<br>உதாரணம் : வரலாற்றுக் கதைகள், வீர காவியங்கள்<br>- வீரகாவிய ஹோமரின் படைப்பு<br>உதாரணம் : இலியட், ஒடிசி<br>- இலக்கிய கர்த்தாக்கள்<br>ஹெரடோட்டஸ், தியுசீடிஸ், அரிஸ்ரோட்டில் |
| கல்வியும் தத்துவமும் | ✳ கல்வி நிலையம்<br>- பிளேட்டோவின் அகடமி அரிஸ்ரோட்டலின் லைசியம்<br>- தொழில் தகமையுடையோர், தத்துவஞானிகள், கலைஞர்களை உருவாக்கியது. |
| | ✳ தத்துவ ஞானிகள் - சோக்கிரடீஸ், பிளேட்டோ, அரிஸ்ரோட்டில் |

 Copyright © Aaruthal 2017 

| | |
|---|---|
| கல்வியும் தத்துவமும் | ✱ வைத்தியத்தின் தந்தை - ஹிப்போகிரடிஸ் |
| | ✱ கணித விஞ்ஞானமுறை - ஆக்கிமிடிஸ் |
| | ✱ நகர அரசுக்கு வெவ்வேறு தெய்வங்கள் |
| | ✱ கிரேக்க தெய்வத்தில் முதன்மையானது சியுஸ் |
| | ✱ வணக்கத்திற்குரிய தெய்வம் - சியுஸின் மகளான அதீனா |
| | ✱ பாதீனிய தேவாலயம் அதீனா தேவதைக்கு கட்டப்பட்டது. |
| விளையாட்டு | ✱ ஓட்டம், குத்துச் சண்டை, பளுதூக்குதல், பரிதி வட்டம் வீசுதல் என்பன ஒலிம்பிக் விளையாட்டினை அறிமுகம் செய்தனர். |
| | ✱ ஒலிம்பிக் விளையாட்டில் நகர குடிமக்கள் பங்குபற்றினர் |
| உலகிற்கு கிடைத்த கொடை | ✱ ஜனநாயக ஆட்சியை உலகிற்கு வழங்கினர். |
| | ✱ ஒலிம்பிக் விளையாட்டினை அறிமுகம் செய்தனர் |
| | ✱ தத்துவஞானிகள், சிந்தனையாளர் போதனைகள் ஐரோப்பிய சிந்தனை வளர்ச்சிக்குதவியது. |
| | ✱ அரசியல், இலக்கியம் விஞ்ஞானம் கலை என்பவற்றை உருவாக்கினார்கள் |

